අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/01/12/05/02/02

ඔබේ යොමුව / உமது இல. / Your Ref.

දිනය / திகதி / Date 2019.12.

**சுற்றறிக்கை இலக்கம்: 50/2019**

மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
மாகாணக் கல்விப் பணிப்பாளரகள்,
வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
கோட்டத்திற்குப் பொறுப்பான பிரதி/உதவிக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல பாடசாலை அதிபர்கள்.

**பாடசாலை விழாக்களை நடாத்துதல் மற்றும் பாடசாலை மாணவர்களை பொது விழாக்களில் பங்கு பெற செய்தல்**

பாடசாலை மாணவர்களை பொது விழாக்களில் பங்கு பெற செய்வது தொடர்பாக இதற்கு முன் வெளியிடப்பட்ட இலக்கம் 2004/28 மற்றும் 2004.07.23 ஆம் திகதிய சுற்றறிக்கையை இத்தால் இரத்துச்செய்வதுடன், பாடசாலைகளில் விழாக்களை நடாத்துதல் மற்றும் பாடசாலை மாணவர்களை பொது விழாக்களில் பங்கு பெற செய்தல் தொடர்பாக இந்த சுற்றறிக்கையின் ஆலோசனைகள் எதிர்காலத்தில் செல்லுபடியாகும்.

2.0 பாடசாலைகளில் பல்வேறு விடயங்களை முன்வைத்து விழாக்கள் நடாத்தப்படுவதோடு, வெளி நிறுவனங்கள் மற்றும் அமைப்புகள் மூலமாக வழிநடத்தப்படும் நிகழ்ச்சித் திட்டங்களிலம் தொடர்பாகவும், பாடசாலை மாணவர்கள் பங்குபற்றச் செய்யப்படுகின்றனர் சில விழாக்கள் நடைபெறுகின்ற காரணத்தால் அவை கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு தடைகள் ஏற்படுவதாகவும் மாணவர் ஒழுக்கம் தொடரபான சிக்கல்கள் தோன்றுவதாகவும் பலதரப்பினர்களிடம் இருந்து இந்த அமைச்சுக்கு புகாரகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

எனவே, பாடசாலைகளில் நடாத்தப்படும் விழாக்கள் போலவே வெளித் தரப்பினரால் ஒழுங்கமைக்கப்படுகின்ற பல்வேறு விழாக்கள் மற்றும் கணகாட்சிகள் தொடர்பாக பாடசாலை மாணவர்கள் பங்கேற்பதை மேலும் சீரபடுத்துவதற்கு பின்வரும் நடைமுறைகளை பின்பற்ற வேண்டும்.

2.1 பாடசாலைகளில் நடாத்தப்படும் விழாக்கள்

இதன் கீழ் விளையாட்டு விழாக்கள், பரிசு வழங்கல், பல்வேறு நிகழ்வுகள் போன்றவை முக்கியமாக அமைவதுடன், அவற்றில் ஆற்றப்படும் சொற்பொழிவுகள் மட்டுப்படுத்தப்பட்டவையாக அமைதல் வேண்டும். குறிப்பாக பரிசுகள் வழங்கும்போது, அதிபரின் அறிக்கை, விசேட அதிதியின் உரை மற்றும் மாணவர் தலைவர்/தலைவியின நன்றியுரை போன்றவை இத்தால் வலியுறுத்தப்படுகின்றது. அத்துடன் பிரதான மேடையில் மாணவர் தலைவர் அல்லது தலைவி அமர்வது மிக முக்கியமாகும்.

மேலும், பாடசாலை விழாக்களின் போது மாணவர்களின் மற்றும் பங்குபெறும் ஏனையோரின் நேரம் தொடர்பாக கருத்திற் கொண்டு மிகவும் நேர்த்தியாகவும், சுருக்கமாகவும் ஒழுங்கமைப்பதற்கும், கல்வி நிகழ்ச்சிகளுக்கு முன்னுரிமை அளித்து விழா தொடக்கத்தில் தேசிய கீதம் இசைப்பதற்கும் விழா முடிவின்போது பாடசாலை கீதத்தை இசைப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அத்துடன் நிரல் அமைச்சில் அல்லது மாகாணக் கல்வித் திணைக்களத்தில்/அமைச்சில் அனுமதியின்றி விழாக்கள் தொடர்பில் மாணவர்கள் மூலமாக நிதி சேகரித்தல் தவிர்க்கப்பட வேண்டியதுடன் விழா செயற்பாடுகள் குறைந்த செலவில் மேற்கொள்வது குறித்து கவனிக்கப்படல் வேண்டும்

பரிசு வழங்கல மற்றும் விளையாட்டு விழாக்கள் தவிர்ந்த பாடசாலையில் நடாத்தப்படும் ஏனைய விழாக்கள் ஒரு மணித்தியாலத்திற்கு (01) மட்டுப்படுத்தப்பட வேண்டியதுடன், மாணவர்களின் திறன் விருத்தியடையும் விதத்தில் அந்த விழாக்களின் வழிநடத்தல் செயற்பாடுகள் மாணவர்களிடம் ஒப்படைப்பது கட்டாயமாகும்.

2.2 பர்டசாலை மாணவர்கள் பங்கேற்கும் ஏனைய விழாக்கள்

(அ) நிரல் கல்வி அமைச்சு அல்லது மாகாணக் கல்வி அமைச்சு ஏற்பாடு செய்யும் கல்வி விழாக்கள்

i. தேசிய/ மாகாண விளையாட்டு நிகழ்ச்சி

ii. தேசிய/மாகாண மட்டத்திலான கலாசார நிகழ்வுகள்
இந்த விழாக்கள் கலாசார அமைச்சு/கல்வி அமைச்சு/ மாகாண கலாசார அமைச்சு/ மாகாணக் கல்வித் திணைக்களம் ஒழுங்குபடுத்துபவையாக இருத்தல் வேண்டும்..

iii. நிரல் கல்விச் செயலாளரின்/ மாகாணக் கல்விச் செயலாளரின்/ மாகாணக் கல்விப் பணிப்பாளரின ஒப்புதலுடன் மாவட்ட செயலாளர்களினால் ஏற்பாடு செய்யப்படுகின்ற சுதந்திரதின விழா, கலாசார விழாக்கள்

iv. அதிமேதகு சனாதிபதி/ கௌரவ பிரதமர்/ கௌரவ கல்வி அமைச்சர்/ மாகாண் ஆளுநர்/ மாகாண முதலமைச்சர் பங்குபற்றும் அல்லது நிரல் கல்வி அமைச்சு/ மாகாணக் கல்வி அமைச்சு/ அல்லது அரசாங்க திணைக்களங்கள்/ கூட்டுத்தாபனங்கள் ஏற்பாடு செய்யும் சுதந்திரதின விழா, கலாசார விழா போன்றவை

v. வெளிநாட்டு பிரமுகர்கள் பங்கேற்கும் விழாக்கள் - இந்த விழாக்களின் போது மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட மாணவர்களை பங்குபெற செய்யலாம்.

(ஆ) நிரல் கல்வி அமைச்சு/மாகாணக் கல்வி அமைச்சு அல்லது திணைக்கள அதிகாரிகளினால் அனுமதிக்கப்பட்ட ஏனைய விழாக்கள்

3.0 பிரதேசத்தில் பல்வேறு அமைப்புகளினால் வழிநடத்தப்படும் நிறுவனங்கள் மற்றம் சங்கங்களினால் பாடசாலை மாணவர்களை ஈடுபடுத்தி மேற்கொள்ளப்படும் கல்விக்குப் பொருந்தாத வதிவிட அல்லது வதிவிட அல்லாத நிகழ்ச்சித் திட்டங்களுக்கு மாணவர்களை பங்குபெற செய்வது தவிர்க்கப்படல் வேண்டும். இதற்கு மேலதிகமாக பல்வேறுபட்ட நபர்களை வரவேற்பதற்காக மாணவர்களை வழியின் இருபக்கங்களில வரிசையாக நிற்க வைத்தல், நிதி சேகரித்தல் அல்லது வேறு பிரச்சார நடவடிக்கைகளுக்காக மாணவர்களை பங்குபெறச் செய்வது தவிர்க்கப்படல் வேண்டும்.

4.0 ஏதேனும் ஒரு அரச நிறுவனம் அல்லது வேறு ஏற்றுக்கொள்ளப்பட்ட அமைப்பினால் மாணவர்களை விழாக்களில் பங்குபெற செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும்போதுஅவர்களுக்கு தேவைப்படும் போக்குவரத்து,உணவு, சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு உள்ளடங்கிய அனைத்து வசதிகளும் வழங்குவதற்கு ஏற்பாட்டளர்களினால் நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

5.0 இதற்கு மேலதிகமாக பாடசாலை இசைக்குழுவை பங்குபெறச் செய்வது பின்வரும் சந்தர்ப்பங்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தல் வேண்டும். இது தொடர்பில வெளியடப்பட்ட 1995/25 கொண்ட சுற்றுநிரூபம் மேலும் செல்லுபடியாகும் என்பதை வலியுறுத்துகின்றேன்.

(அ). தமது பாடசாலையில் நடாத்தப்படும் விழாக்கள்

(ஆ). நிரல் கல்வி அமைச்சு அல்லது மாகாணக் கல்வி அமைச்சினால் ஏற்பாடு செய்யப்படும் கல்வி விழாக்கள்

(i) தேசிய/மாகாண விளையாட்டு நிகழ்ச்சி

(ii) தேசிய/மாகாண மட்டத்திலான கலாசார நிகழ்வுகள்

இந்த விழாக்கள் கலாசார அமைச்சு/ கல்வி அமைச்சு/ மாகாண கலாசார அமைச்சு/ மாகாணக் கல்வித் திணைக்களம் ஒழுங்குபடுத்துபவையாக இருத்தல் வேண்டும்.

(iii) நிரல் கல்விச் செயலாளரின் /மாகாணக் கல்விச் செயலாளரின் / மாகாணக் கல்விப் பணிப்பாளரின ஒப்புதலுடன் மாவட்ட செயலாளர்களினால் ஏற்பாடு செய்யப்படுகின்ற சுதந்திரதின விழா, கலாசார விழாக்கள்

(iv) அதிமேதகு சனாதிபதி அவர்கள/ கௌரவ பிரதமர்/ கௌரவ கல்வி அமைச்சர்/ மாகாண் ஆளுநர்/ மாகாண முதலமைச்சர் பங்குபற்றும் அல்லது நிரல் கல்வி அமைச்சு அல்லது அரசாங்க திணைக்களங்கள்/ கூட்டுத்தாபனங்கள் ஏற்பாடு செய்யும் சுதந்திரதின விழா, கலாசார விழா போன்றவை

(v) வெளிநாட்டு பிரமுகர்க்ள் பங்கேற்கும் விழாக்கள் - இந்த விழாக்களின் போது மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட மாணவர்களை பங்குபெற செய்யலாம்.

6.0 இதற்கு அப்பால் வேறு தருணங்கள் தொடர்பாக பாடசாலை இசைக்குழுக்களை பங்கு பெறச் செய்வது தவிர்க்கப்படல் வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றேன்.

7.0 இவ்விடயங்களுக்கு மேலதிகமாக பாடசாலையில் நடாத்தப்படும் காலை கூட்டம் தொடர்பாகவும் உங்கள் கவனத்தை ஈர்க்க விரும்புகின்றேன்.

காலைக் கூட்டமானது பாடசாலை மாணவர்களுக்கிடையில் ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டை உறுதி செய்து கொள்ள வேண்டிய அதேவேளை சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்ட காலைக் கூட்டமானது தேசப்பற்று மற்றும் உயர்வான குணங்களை சிறுவயது முதல் பயிற்றுவிப்பதற்கும், மதப்பின்னணி ஒன்றை உருவாக்குவதற்கும் உதவும். சகல பாடசாலைகளிலும் அன்றாட நிகழ்வுகளை தொடங்குவதற்கு முன் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் பங்களிப்புடன் சமய நிகழ்ச்சிகளை மேற்கொண்டு காலைக்கூட்டம் நடாத்தப்படல் வேண்டும். பாடசாலையில் இடவசதி மற்றும் வளங்கள் மட்டுப்படுத்தப்பட்டதாகக் காணப்படுமெனில் பிரிவு மட்டங்களில் காலைக் கூட்டங்களை நடாத்தலாம். சமய நிகழ்ச்சிகளுக்கு பின்னர் பாடசாலை கீதம் இசைக்கப்பட வேண்டியதுடன், அதிபர் அல்லது ஆசிரியர் ஒருவரினால் அறிவுறுத்தல் சொறபொழிவொன்று நடாத்தப்படல் வேண்டும். காலைக் கூட்டம் தொடர்பாக 15 வினாடிகள் ஒதுக்குவது போதுமானதாகும். இந்த நிகழ்வுகள் தாமதமின்றி ஆரம்பிப்பது கடினமாக இருக்குமெனில் பாடசாலையில் நிலவும் வசதிகளை கருத்திற்கொண்டு காலைக் கூட்டத்தை ஏற்பாடு செய்தல் அதிபரின் பொறுப்பாகும்.

8.0 செவ்வாய்க்கிழமை, வியாழக்கிழமை, மற்றும் வெள்ளிக்கிழமை போன்ற மூன்று தினங்களில் பாடசாலை மாணவர்கள் தொடர்பாக 10 வினாடிகள் உடற்பயிற்சித் தொடர் ஒன்றை நடாத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். இது தொடர்டபாக விளையாட்டு ஆசிரியர் ஒருவர் இல்லாவிடின் இது தொடர்பான அறிவுடன் கூடிய ஆசிரியர் ஒருவரை ஈடுபடுத்தலாம்.

காலைக் கூட்டம் மற்றும் உடற்பயிற்சி தொடர்பாக ஒதுக்கப்படவேண்டிய ஆகக்கூடிய நேரம் 15 வினாடிகளாகும்

9.0 நாள் முடிவில் மாணவர்கள் வகுப்பறையைவிட்டு வெளியேறும்போது கடைசிப் பாடவேளையில் கற்பித்தலில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களினால் தமது வகுப்பறையின் மாணவர்கள் மத வழிபாடுகளுக்குப் பின்னர் கண்ணியமாக வகுப்பறையைவிட்டு வெளியேறுகிறார்களா என்பது தொடர்பாகக் கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

இந்த சுற்றுநிருபத்தில் எழும் எந்தவொரு பிரச்சினைகள் தொடர்பில் கல்வி அமைச்சு செயலாளரின் முடிவு இறுதி முடிவாகும்.

ஏன்.எச்.எம். சித்ரானந்த,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

பிரதிகள்:-

1. கணக்காய்வாளர் நாயகம்
2. மாகாண கல்விச் செயலாளர்கள்
3. தேசிய கல்வி ஆணைக்குழுவின் தலைவர்
4. தேசிய கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம்
5. பரீட்சை ஆணையாளர் நாயகம்
6. கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
7. கல்வி அமைச்சின் சகல நிறைவேற்று அதிகாரிகள்
8. கல்வி அமைச்சின் சகல கிளைத் தலைவர்கள்